

(Tamil) =

1873 / 1214

2909 — 13 — B

MAHATMA GANDHI PAATUGAL

same copy of 2969 Sl. no. 13

வந்தேமாதரம்!

ம

காந்தி

ஸ்ரீ

நமது தலைவர்

மஹாத்மா காந்தி, திலகர்,

ஸௌகதாலி. ஸி. ஆர். தாஸ். லா

ஸரோஜினி தேவி, முதலியவர்

சுதேசானந்தகீதம்.

19 AUG 1937

இவை

அய்யம்பேட்டை புஸ்தகவியாபாரம்

நா. கு. அ. அப்துல் ரஹிமான் சாயபு

அவர்களால் இயற்றியதை

சென்னை திருவொற்றியூர்

நாகை. சரவணமுதலியார் அவர்களது

கலைமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

1929 [அணா 1

...ES LIBRARY
...09
...1.3.72
GOVT. OF INDIA

ஸ்ரீ ராமகிருஷ்ண அசோசியேஷன்,
SRI RAMAKRISHNA ASSOCIATION,
கண்டனூர். KONDANOOR.

சிவமயம்.

M. M. V.
KONDANOOR.

மஹாத்மா

காந்திபாட்டு.

ஒற்றுமையொன்றே வெற்றிக்கு உயர் நிலை
தீவினைவிலக்கலே தேசத்தின் ஒற்றுமை.

(சிக்கல் சிங்கார வடிவேலா என்ற மெட்டு)

பாரதமாதா தேவி உம்மைரக்ஷித்தருளுமிப்புவி
கம்ஸன்விடுத்ததொரு தேரின்கஷ்டமதை
கிருஷ்ணனைகொண்டவனை ஒழித்துமேயெறிந்தாயே (பா
அரக்கர்சேனைகளும் அதர்மகூட்டங்களும்
அதறி ஓடிடவே உதறி அடித்திட்ட (பா
தமதகைமகிழ் மந்தரை மல்லியுந்தான் தாளில்
பணிந்துரிதம் பக்தவத்ஸலம்போற்றும்

(பூமிமேச்சிடும் என்ற வர்ன மெட்டு.)

உலகம்புகழ்ந்திடும் உத்தமகாந்தியை
நாடுவோம் தினம்பாடுவோம் அருள்தேடுவோம்
இவர் பாரதமாதவின்தா துயரைதீர்க்கவந்த
புண்யவான் மிகுகண்யவான்

அன்னியதேசத்தின் ஆடைவிலக்கச்சொன்ன
தைரியவான் நல்லசாந்தவான் மிகுசத்தியவான்
நம்மதேசாபிமான்களை கார்த்திட நாட்டினம்
காட்டினார்பறைசாற்றினார்

ஒத்துழையாமையை ஊக்கத்துடனேநமக்
கூட்டினார்உம்மைக்காட்டினார் புத்திதீட்டினார்
இந்துதேசசுயாக்ஷியின் மகிமைதுலக்கவந்த
யோகியாம் நல்லயூகியாம்

வந்தேமாதரமென்று தந்தார் நமக்கெல்லாம்
தந்திரம்தேசமந்திரம்நல்லயந்திரம்
இவர்உடல்பொருள் ஆவியைஉலகத்திற்கேத்த
தீராம்பக்தர்தேவராம்

அஹிம்ஸாதர்மத்தை ஆதரிக்கவந்த
அய்யனைஎந்தன் மெய்யனைபணிந்துய்யுவோம்
எந்தஜாதிபேதமின்றி நீதிபுகட்டவந்த
சாமியாம் எங்கள்நேமியாம்

கள்ளுசாராயமதை துள்ளிகுடித்திடும்
வம்பரே அதுதுன்பமா நல்லஇன்பமா
என்றுகாந்திமகானுரைத்திடும்வாக்கியம்
சிலாக்கியம் நம்பபாக்கியம்

பூர்த்திஸஹிக்காத பாஞ்சாலபடுவஞ்சை
தீர்க்கவோநன்மை கார்க்கவோ அதேநோக்கமாய்
சத்தியாக்கிரஹம்என்ற நாளொன்றுவைத்தாரே.
ருஷியாய்மனசாட்சியாய்

தேசாபிமான ஜெயக்கொடியை பூண்ற
பூமனே அருள்நாமனே பரந்தாமனே
இந்தபக்தவத்ஸலன் அநுதினம்போற்றிடும்
காந்தியாம் பரஞ்சோதியாம்

(மோத்தாட பாராதேனே என்ற வர்ண மேட்டு.)

பல்லவி

சாந்தஸ்வரூபமூர்த்தி காந்திமகானே (சா

அநுபல்லவி.

சாதுஜன சம்ரக்ஷணகீர்த்தி (சா

சரணங்கள்.

ஸ்வராஜ்யங்கோரும் சுதேசமக்களுக்கே
கிருஷ்ணஜனனபூமி என்றேசிறையடைந்த (சா

கெய்ராவில்நடந்தஸாத்வீக எதிர்ப்பிலேபூர்ண
ஜயமடைந்தபுண்ணியவான்மகாத்மா (சா

இமயமலைமுதல் குமரிமுனைவரை ஒத்துழையா
மையைகர்ப்பித்தருளிய (சா

அயோத்தியையாண்ட அரிச்சந்திரரைப்போல
சத்தியம்தவறாதநித்தியாநந்தனெனும் (சா

பக்தவத்ஸலதாசன் பணிந்தொழும்நேசன்
கஸ்தூரியம்மையின் கருணைஉல்லாசன் (சா

மூகாரி அடதாளம்.

பல்லவி.

காந்தியைசிறைவைத்தாரே-மகானெனும் (கா

அநுபல்லவி.

அடாதகாரியம்என்செய்தாரோஎழைமனம்
பதறயேங்கியேதுடித்திட (கா

சரணங்கள்.

அரசனிந்தனையெனும் அடாதகுற்றம்சாற்றி
ஆராண்டுசிறையினில் அவதிபடவைத்தனரே
இதேதுஅநியாயம் உந்தன் திருவருளோ (கா

உண்மையிதுவெனும் தன்மைபரமதயாளுவே
பாஞ்சாலியைக்காத்த பரமதயாளுவே
வஞ்சகம்தானேனோவையகம்தனிலே
அஞ்சலிசெய்திட்டேன் ஆதரிக்கவருவாய்
பக்தவத்ஸலசாமிபணிந்து தொழும்நேமி (கா

(சொக்கலிங்கக்கடவுளே என்ற வர்ண மெட்டு.)

மகம்மதியர்மதத்தில் மாணிக்கமாய்விளங்கு
மவுலான மகம்மதலியா
அவர்பிரசங்க மண்டலமெங்கும் சோதியே]
சகலமதங்களை ஒருவிதமாக்கி ஜெயக்கொடிநாட்டியே
சிங்கம்போலேஎங்கும் சுகதேசக்கொடியே
இகபரமாய்மவுலானஷவுக்கதலியே
அவர்பிரசங்கம் மண்டலமெங்கும் சோதியே.]
கல்கத்தாகருச்சிமுதல்காபூல் தேசங்களெல்லாம்
காங்கிரஸ்கொள்கை பாருமேஇந்தியாவில்]
விளங்கவே இல்லைபாருமே.
தீண்டாமையென்பதைநாம் தீவிரமாய்ஒழிக்க
மவுலானமுகமதலியே
அவர்பிரசங்கம் மண்டலமெங்கும் சோதியே
கள்குடியைஒழித்திக்கதரை தரிக்கச்செய்தனங்கள்மகாத்மா
காந்தியைஎந்நாளும்நீர் புகழ்மாறுமல்ஒக்கியே
அவர்பிரசங்கம் மண்டலமெங்கும் சோதியே.

காந்தியின்பெருமை அறிவார்உலகில்
கண்டவரில்லையாருமே
அவர்பிரசங்கம் மண்டலமெங்கும் சோதியே.

சுயராஜ்ஜியம்பெறபவசூக்ஷமதாய் பிறந்தசெல்வமகாத்மா
காந்தியென்றுநாமேசீர் புகழ்மாறாமல்ஓங்கியே
அவர்பிரசங்கம் மண்டலமெங்கும் சோதியே

தீண்டிணுசுஒழிக்க சீக்கிரமாயவதரித்த
செல்வமகாத்மாகாந்தியே
அவர்பிரசங்கம் இந்தியாஎங்குஞ் சோதியே

இந்தியாசட்டமதைசீர்திருந்தசீர் செய்யவந்தகோபாலனே
வாசீபாஉண்மகிமை ஆர் அறிவார்உலகில்லவா
அவர்பிரசங்கம் ம. ஏ. சோதியே

சகலமதங்களைஒருவிதமாக்கி ஜெயகொடிநாட்டியசிங்கம்
போலெஎங்குஉலாவிவருவாரே தேசதொண்டர்
கதர் கதர் என்று சொல்வரே இந்தியா
முழுமைஎங்கும் பிரசங்கம்செய்வாரே.

நாம்க்ஷேமமடைவதற்கு நல்லவழியிதுவே
அணிந்துகொள்வீர்கதரையை தேசமெங்கும்
க்ஷேமமாய்வாழ்ந்து வருவோமே அ. பி. ம. எ. சோ.

கதர்ஆடைபெருமைகண்டவரில்லையாரும்காந்தியின்
சொல்லைநம்புமேசுயராஜ்ஜியம்பெற சூக்ஷம்மாய்
வழியைபாருமே அ. பி. ம. எ. சோ.

இந்தியருக்குநீரும்சுகந்தர வழியைக்காட்டிசுகமுடன்
வந்தபூபதியே ஷவுக்கதலியேமவுலானு
மூஹம்மதலியே அ. பி. இந்தியா எ. சோ.

ஏகவாடாசாலைக்குள்ளே அன்பாய்தவமிருந்து இன்பமாய்
வந்தபூபதியே எங்கள்காந்தியே
எங்கும்விளங்கும்சோதியே

கதர்ஆடையைதரித்தோம் யின்பமாகநீர்பாரும்செல்வ
மகாத்மாகாந்தியே அ பி. இந்தியா. எ. சோ.
சுதந்திரமென்னும் விதைதனைநாட்டிசுகமுடன்
ஆளச்செய்தபாரத எங்கள்மாதாவே
அ. பி. ம, எ. சோ.

மதவஸ்துவைஒழித்தோம் சுதந்திரவழிபிடித்தோம்
சூக்ஷம்செய்குவாய்காந்தியே எங்களுக்கேநீர்
மோக்ஷம்தருவாய்காந்தியே அ. பி. ம. எ. சோ.

ஜனசங்ககூட்டமதில்சகல வொத்துழைப்செய்யதேகப்
பிரயாசைகொண்டவா சக்கரம்தனைஎங்கும்விதி
எரிந்தவாஉன்மகிமையார் அரிவார்உலகில்வா

சென்னைமாகாணமதை சீர்திருத்தம்சீர்செய்யசீக்கிர
மாய் பிறந்தவா மகாவிஷ்ணுவைபோல் எங்குஉலாவி
வந்தவா உன்பிரசங்கம் ம. எ. சோ

ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ண மெட்டு

உணரக்கூடாதாமனதுஉருகக்கூடாதா சற்று உணர்ந்துபாருங்கள்
இன்றே வென்று சேருங்கள்

கெயறுவில் நம்மவர்கே கிருபை புரிந்தமகான்தெய்விகமான
சிறைவாசம் செய்வதைநாம் பார்த்திருந்தோம்

ஆரியரும்திராவிடரும் ஆதியில்ஒன்றாயிருந்தோம் சிரிய
சகோதரர்கள் சேர்ந்துசேர்ந்து வாழ்ந்துவந்தோம்
அரியக்கூடாதா மனது ஆக்ஷிசெய்யக் கூடாதா

நம்தேசபொருள்இல்லையோநாகரீகமாயில்லையோஅன்னியதேச
ஆடைகீர்அன்புடனேஉடுக்கிறீரே உ. ம. உ.

காந்திமகான்தேசதொண்டர் சொல்லிவந்தார்கோடாகோடி
மகாத்மாயென்றபேருவந்ததிங்குயாருக்கென்று அ. ம. ஆ.

பஞ்சாபில்செய்தகொலைபார்த்துமேஇருக்கலானீர்அரசாங்க
சட்டத்திற்குஅடங்கியேநாம் இருக்கலானோம்களைய
கூடாதாமனது கருகக்கூடாதா அரிந்துபாருங்கள்
சுயராஜ்ஜியம்தன்னைகோருங்கள்

சுயராஜ்ஜியம்தன்னைகோரி சொல்லிவந்தார் மகம்மதலி
ஷவுக்கதலிசொல்லைநம்பி நடந்தவர்களில்லையாரும் உ. ம. உ.

குணமானகாந்திமகான்கொண்டு அனைத்துசொல்லும்
வார்த்தைஇறந்துபோனபிரேதம்கூடஇன்பமாக
கேட்கின்றதே அ. ம. ஆ.

தவஞானிகாந்திதவவேடன் கொண்டிருக்கநாம்
மாத்திரம்வெட்கம்கெட்ட செம்பார்மல்கட்டலானோம் அ. ம. ஆ

சுயராஜ்ஜியம்தன்னைகோரி சுகமுடனே ஆசைகொண்டால்
அயல்நாட்டுவஸ்துவைநீர் அரவேவொழித்திடுங்கள்
வழியைத்தேடுங்கள்சுய ஆட்சிதன்னைகோருங்கள் உ. ம. உ.

இந்தியர்க்கேஓர்சட்டமாம் ஆங்கிலேயருக்கு ஓர் சட்டமாம்
இரண்டுவிதமானசட்டம் வந்திருக்கிறதையா ஜெயிலுக்குச்சென்றோ

கள்ளுசாராயம்உஸ்கி காலமெல்லாம் குடிப்பதனால்
கொள்ளை ஆகபோகிறதே கோடாகோடி திரவியங்கள்
அரியக்கூடாதா மனது ஆராட்ச்சி செய்யகூடாதா

அம்பிகா உன்மகன் குகன் என்ற வர்ண மெட்டு.

அம்பிகாஉன்மகன்காந்தி அம்பிகாஉன்மகன்காந்தி
நம்பினோரைவிளக்கச்செய்தார் நாட்டிலுள்ளோர்வாழச்செய்தார்
எல்லோரையும்சேர்த்துவைவத்தார் சுதெசிகொடியைநாட்டி
வைத்தார் அம்பிகா உன்மகன்காந்தி

சாராயம்மதவஸ்துனவவிஷமதாய் போக்கச்செய்தார்
பெண்டுபிள்ளைகளுடன் யேகசம்பத்தாய்வாழசெய்தார் அ உ கா

பருத்திபஞ்சுமுதலியபக்குவமாய் நூர்க்கசெய்தாய்
பலவிதமான ஆடை சீக்கிரமாய் தரிக்கசெய்தார் அ உ கா

சீர்திருத்தவேண்டுமென்று சிக்கிரமாய் அவகரித்தார் இந்தியாவில்
பிறந்தார்வககுக்காம் ஆட்டிவைத்தார் அம்பிகா உன் மகன்காந்தி

கணிகளை பரித்து நான் வருவேன் என்ற வர்ண மெட்டு,

ஆண்:—கதர் ஆடை தரித்துநான் வருவேன் சுதந்திரப் பெற
உழைப்பேன்

பெண்:—உன்னுடன்யானும் வருகுறேன்நாதா என்னையும
அழைத்துயேகுவீர்

ஆண்:—சென்றுவருகுவோம் இன்றுசிறைவாசம்
தனிலேநாம்சென்று

பெண்:—என்னைதொட்டுதாலிக்கட்டியகாந்திநான்
தொடர்ந்துவருவேனே காந்தி

ஆண்:—சுதந்திரம் தனைபெறநாமேஉழைப்போம்
இருவரும்மானே

பெண்:—நாதா இந்தியாவிலே பாரும்இயக்கம்
மில்லைசுயநாதா

ஆண்:—சூக்ஷமதுநீயெசொல்வாய் சுதந்திரம்பெற
வழிசொல்வாய்

பெண்:—நாதா கள்குடியை ஒழித்தால்தானே சிறப்பாக
வந்திடுவோமே

ஆண்:—காந்தியின்பெருமையாரும்அரிந்த
வாரில்லையேமானே

பெண்:—நாதாகதர் அணிந்தவிடன் தாமே சுப ஆசுதி
பெருவோம்நாதா

சரி சரி என்ற மெட்டு

தயார் தயார் தேசியத் தொண்டர்படை தயார் தயார்
தயங்காமலேசிறைசென்றுமே சுயராஜியம்பெறவேண்டுமே
சக்ராயுதராட்டினத்தால் சுற்றியநூல்வஸ்திரம்
காரும்அன்யர்கொள்கை தகிப்பதற்கோர்அஸ்திரம்
சாந்ததந்திரம்மகாத்மாகாந்திமந்திரம் [தயார்
தயங்காமலேசிறைசென்றுமே சுயராஜ்யம்பெறவேணுமே
நோற்றதோர்விரதமதைகைவிடோம்
நோக்கியேசுதந்திரகொடிநாட்டிடாமலிருந்திடோம்
நோம்புகொள்ளுவோம் காங்ரஸ்மாண்புகைவிடோம்
தயங்காமலேசிறைசென்றுமே சுயராஜ்யம்பெறவேண்டுமே
வாரண்டுதான் இரும்புகாப்பு மகிமைநாங்கள்அறிகுவோம்
வந்துஅரஸ்டுசெய்வரோடு மௌனமாய்முன்னேகுவோம்
வழக்குபேசிடோம்அவர்வழிமைகூடிடோம் [தயார்
தயங்காமலேசிறைசென்றுமே சுயராஜ்யம்பெறவேணுமே

இந்தியா மகிமை

காண அலங்காரம் இந்தியா பார்க்கவினோதம் காண அலங்காரம்
பார்க்கவினோதம் கேழ்க்கவினோதம் காண அலங்காரம்
முகத்திணில்அழகுபோச்சு முண்டைகள்போல்
இருக்கலாச்சு, மஞ்சள்குங்குமம்போச்சு வினோலியா
வைட்ரோஸ்பூசலாச்சு காண அலங்காரம்
அரைக்கைரவிக்கைபோச்சி சிலுக்குமல்பாடியாச்சி
ஆங்கர்சிப்வைத்துமே அவக்ஷயனம்பவுடர்
பூசலாச்சி காண அலங்காரம்
கொரநாட்டுபுடவைபோச்சி கோரினபுடவை
எடுக்கலாச்சிநாசிவேஷம்போல் இந்தியாவில்இருக்கலாச்சு
நாட்டுவளையல்போச்சுநாகரீகம் பெருக்கலாச்சு காசு
பவுனைவைத்துகைவளையல்செய்பலாச்சு காண அலங்காரம்

அம்பர்லா செண்டுடன் அதிகமாய் பூசலாச்சு அடிமை
தனக்கேநாம் அடங்கியே இருக்கலாச்சு — காண அலங்காரம்

காந்தி விநோதம் கேழ்க்க விநோதம் சீமைத் துணி சுழிந்து
சீர்திருத்தம் செய்ய பாரும் — காண அலங்காரம்

நொண்டிச்சிந்து

இந்தியாவிலே நீரும் சீர்திருத்தம் நீர் செய்ய அய்யா அய்யா சீர்திருத்தம் நீர் செய்ய கதர் ஆடை தரித்து நண்குளிர கண்டுமே ஆனந்திக்க அப்பா கண்டுமே ஆனந்திக்க கள்ளு சாராயம் உஸ் நிகுடிப்பதினால் கண்டவர்கள் பேசும்படியானோம் பெண்டுபிள்ளையருடன் பேதமைப்போல ஏங்கியே வாடலானோம் நம் தேசமக்களெலாம் நாடி சிறையிருக்க நாம் மாத்திரம் வெட்கம் வாழலானோம் மவுலான சுகம நலி தேசதொண்டர்கள் கதர் கதர் என்று சொல்லி கதர்கின்றார் தேசஆதியந்த முழுதும் அணிந்தவர் ஒருவரில்லையே சென்னைமாகாணமதை சீர்திருத்தம் செய்யவேவந்த கதர்சட்டசபை உத்தியோகம் பட்டம்பெற்ற அழகான எங்கள் கதர் இந்துமுஸ்லீம் சகோதரர்கள் ஒத்துமை செய்ய அழகான எங்கள் கதர் அணிந்தவுடன் நிகரிலா சிங்கம்போல் வாழ்ந்துயிருப்பீர் அய்யா அய்யா.

மஹாத்மா காந்திபாட்டு,

முற்றிற்று.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!!

அற்புதம்!!! அதிசயம்!!!! ஆனந்தம்!!!!!

படித்தால் ருசிக்கும் நினைத்தால் மணக்கும்

முத்தத்தின் மர்மம்.

கண்ணைக்கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 200-பக்கங்களுக்குமேல் உயர் பெகர்வெலட் பேபரில் சுத்தமாக நன்கு அச்சிட்டு அழகிய சிலைகவிகோ பைண்டு செய்தது இது காதலருக்கும் இன்பந்தரும் நூல். நமது பூர்வ கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும் மதன நூலின் மர்மங்களும் இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய முத்தத்தின் வரலாறு, எதற்காக ஒருவரையொருவர் முத்தமிட வேண்டும் பூமியை முத்தமிடுவதின் நோக்கம் காதலர் முத்தச்சிறப்பு காதலர் காமமும் டெலிபோன் மூலம் முத்தமிடல் நாலு மணிநேரத்தில் 7001 முத்தங்கள் கொடுத்த மணப்பெண் இம்மாதிரியாகிய 107 விஷயங்களும் உள்ளது. இதன் விலை ருபா $1\frac{1}{2}$

எமது விலாசம்:— கலைமகள் விலாச புஸ்தகசாலை

சென்னை திருவொற்றியூர் போஸ்டு, மதராஸ்.

கலைமகள் விலாச அச்சுக்கூடம் சென்னை திருவொற்றியூர்